சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
விலை 10/=
24.07.2020 வெள்ளிக்கிழமை

## குடும்பஸ்தரின் சடலம் வவுனியாவில் மீட்பு

வவுனியா,ஜூலை 24
வவுனியா கிடாச்சூரி பகுதியில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் நேற்று வியாழக்கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளது. செட்டிகுளம் மெனிக் 6

## இராஜாங்கனையில் மூன்றாம் அலை!



கொழும்பு,ஜூலை 24
இராஜங்கனை பகுதியில் கொரோனாவின் மூன்றாவது அலை பதிவாகியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிறை வேற்றுக் குழு உறுப்பினர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். இலங்கையில் 6

## விக்னேஸ்வரனிடம் சி.ஐ.டி. விசாரணை!

யாழ்ப்பாணம், ஜூலை 24
வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் உயர் பொலிஸ் சி.ஐ.டி. குழுவொன்று இன்று இரண்டு மணித்தியாலங்கள் கடும் விசாரணையை மேற்கொண்டது. கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகளின் உத்தரவையடுத்தே இந்த விசாரணை இடம்பெற்றதாகத் தெரிவிக் 6

## புதினம்? தெரியுமோ

போன 18 ஆம் திகதி சனிக்கிழமை 'புதினம் தெரியுமோ?' பகுதியில ஒரு பள்ளிக்கூடம் பற்றிச் சொல்லியிருந்தம். உங்களுக்கும் நினைப்பிருக்கும். ஆனால் அந்தப் பள்ளிக்கூடம், வட்டுக் கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பெருமை கொண்ட பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் எண்டு எல்லாரும் கண்டு பிடிச்சிருப்பீங்கள். அதுபற்றி பட்சிக்கு கிடைச்ச தகவல் ஒருபக்கச் சார்பானது எண்டு பள்ளிக்கூட 6

## சுமந்திரனின் ஆதரவாளர்கள் இன்று கைது!

யாழ்ப்பாணம்,ஜூலை 24
தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.ஏ. சுமந்திரனுக்கு ஆதரவாக சுவரொட்டி ஒட்டிய இருவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வட்டுக் 6

# ஒற்றையாட்சிக்குள்ளேயே தீர்வு ஒருமித்த நாட்டுக்குள் அல்ல!

## மஹிந்த பிடிவாதம்



கொழும்பு,ஜூலை 24
"ஒருமித்த நாடு என்ற சொற்பதத்துக்குள் சமஷ்டித் தீர்வை– தன்னாட்சி தீர்வை– உருவாக்க முடியும். எதிரணிகளின் இந்தத் திருட்டுத்தனம் பற்றி நாம் மிகவும் அவதானமாக இருக்கின்றோம். அதனாலேயே ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்." 6

## இராணுவ அதிகாரியே வடக்கின் புதிய ஆளுநர்?

கொழும்பு,ஜூலை 24
ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் பொனிபேஸ் பெரேரா வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்படலாமெனக் கூறப்படுகின்றது. நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை 6

## தேர்தலை நடத்த மேலதிகச் செலவு 50 கோடி ரூபா!



கொழும்பு,ஜூலை 24
எதிர்வரும் பொதுத் தேர்தலை சுகாதார விதிமுறைகளுக்கு அமைய நடத்துவதாயின் மேலதிகமாக 50 கோடி ரூபா செலவாகும் என தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது. இதேவேளை 6

## கொரோனா நோயாளி தப்பிப்பு; சில மணிநேரத்தில் கண்டுபிடிப்பு



கொழும்பு,ஜூலை 24
அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரோனா நோயாளி ஒருவர் இன்றுகாலை அங்கிருந்து தப்பிதோடியதால் நாட்டில் பெரும் பரபரப்பு 6



## நல்லூரானைத் தரிசிக்க அ.அட்டை அவசியம்!

யாழ்ப்பாணம், ஜூலை 24
நல்லூர் ஆலயத் திருவிழாவில் பங்கேற்க வரும் அடியவர்கள் அனைவரும் அடையாள அட்டை கொண்டு வருவது அவசியம் என யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பேர்னாண்டோ அறிவித்துள்ளார் வரலாற்றுப் பெருமை மிக்க நல்லூர் ஆலய உற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ள நிலையில், உற்சவத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. நாளை முதல் திருவிழாவில் 5

## பாரவூர்தி எமனானது: விபத்தில் ஒருவர் சாவு

கிளிநொச்சி,ஜூலை 24
கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் இரவு வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியோடு, சொகுசு வாகனம் மோதுண்டதில், ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். இந்த விபத்து சம்பவம் நேற்று வியாழக்கிழமை இரவு 8.40 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக ஜெயபுரம் 6

## பாவம் சாரதி!

கொழும்பு, ஜூலை 24
இன்று காலை அங்கொடை வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்ற கொரோனா நோயாளி பயணித்த முச்சக்கர வண்டி சாரதியையும் கந்தகாடு தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்ப 6

# சுகாதாரச் சீர்கேடு: உணவகத்துக்கு சீல்

முல்லைத்தீவு, ஜுலை 24

சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்றின் உரிமையாளருக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் பல்பொருள் வாணிபங்கள் என்பவற்றில் மல்லாவி பொதுச்சுகாதார பரிசோதகர் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் பரிசோதனை மேற்கொண்டிருந்தனர். இதன் போது பலகுறைபாடுகளுடன் இயங்கிய உணவகம் ஒன்றுக்கும் ஒரு பல்பொருள் வாணிபத்துக்கும் கூட்டுறவு மூலம் இயங்கும் வாணிபம் ஒன்றும் எதிராக நேற்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

உணவகத்தில் மருத்துவ சான்றிதழ் இல்லாமை, தனிநபர் சுகாதாரமான முகச்சவரம் செய்யாமை, உணவகத்தின் சமையலறை சுகாதாரத்துக்கு முரணாக இருந்தமை, களஞ்சிய அறை இலகுவாக தொற்று ஏற்படக் கூடிய நிலையிலிருந்தமை மற்றும் சமைத்த சுடு கறியை இலகுவாக நச்சுப் பதார்த்தம் ஊடுகடத்தக்கூடிய பிளாஸ்டிக் வாளியினுள் களஞ்சியப்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளுடன் பொது சுகாதார பரிசோதகரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது உணவக உரிமையாளர் குற்றத்தை ஒப்புக்கொண்டதற்கு அமைவாக 25 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் உணவகத்தைப் பொதுச்சுகாதார பரிசோதகர் உறுதிப்படுத்தும் வரை மறுஅறிவித்தல் வரை மூடும்படியான கட்டளையும் பிறப்பிக்கப்பட்டது.

மேலும் பல்பொருள் வாணிப நிலையத்தில் காலாவதியடைந்த நிலையில் 1கிலோ கிராம் மிளகுத்தூள் மற்றும் கஜு பைக்கற் என்பவற்றை விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்துக்காக 15 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (ரி1-9)



சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் புதிய மாடிக் கட்டடத் திறப்பு விழா நேற்றுப் பிற்பகல் பாடசாலையின் அதிபர் பா.பாலசுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சாள்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மேற்படி கட்டடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.



‘அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை’ என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சுமார் 13மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட கட்டடம் வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சாள்ஸால் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன், வடமாகாண கல்வி அமைச்சரின் செயலாளர் எல்.இலங்கோவன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் சி.உதயகுமார் மற்றும் வடமராட்சி வலயக்கல்வி பணிப்பாளர் யோ. ரவீந்திரன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ரி1-8)

# கர்ப்பிணிகளுக்கு பழுதடைந்த போசாக்குணவு

## முகாமையாளருக்கு மன்று எச்சரிப்பு

மல்லாவி, ஜுலை 24

கர்ப்பிணிகளுக்கு பழுதடைந்த போசாக்கு உணவுப்பொருள்களை வழங்கிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை முகாமையாளர் ஒருவரை முல்லைத்தீவு நீதிமன்று எச்சரித்துள்ளது. வழங்கிய கடலைகளை மீளப்பெற்று நல்ல கடலையை வழங்குவதற்கு உத்தர விட்ட நீதிவான் வழக்கை ஓகஸ்ட் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ரி1-9)

# கித்துள் கள் வடித்தலுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜுலை 24

கித்துள் மரத்தில் கள் வடிப்பவர்களைக் கைது செய்யவோ, அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவோ வேண்டாம் என்று பொலிஸ்மா அதிபர் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

அனுமதிப்பத்திரமின்றி சட்டத்திற்கு அமைவாக கித்துள் கள் வடித்தல் மற்றும் அதனூடாக கள் தயாரித்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம் எனவும் பொலிஸ்மா அதிபர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ரி2)



கிளி. இந்துக் கல்லூரி மாணவியால்

# ஜனாதிபதி விருதுக்கான சாரணர் செயற்றிட்டம் பூர்த்தி

கொடிகாமம், ஜுலை 24

ஜனாதிபதி விருதுக்கான 72 மணித்தியாலங்கள் கொண்ட சாரணர் செயற்றிட்டம் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் சாரணிய மாணவி யோகேஸ்வரன் கோமகளினால் அண்மையில் பூர்த்திசெய்யப்பட்டது.

இந்தச் செயற்றிட்ட நிகழ்வு கிளிநொச்சி மாவட்ட பெண் சாரணிய உதவி மாவட்ட ஆணையாளரும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் ஆசிரியருமான த.மேகலா தலைமையில் செல்வாநகர் ஓம் சக்தி வேல் முருகன் ஆலயத் தின் முன்றிலில் அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் போது, ஜனாதிபதி விருதைப் பெற்றுக்கொள்ளவுள்ள மாணவி யோ.கோமகளின் செயற்றிட்டத்தில் உருவாக்கப்பட்ட தேங்காய் உடைக்கும் தொட்டி ஆலய நிர்வாகத்தினிடம் கையளிக்கப்பட்டது. (ரி1-159)

# கொவிட் -19 நிதிய வைப்பு மீதி 1,511 மில்லியனாக அதிகரிப்பு

கொழும்பு, ஜுலை 24

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் ‘இடுகம’ கொவிட் 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 1,511 மில்லியனாக அதிகரித்துள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்புச்செய்து வருகின்றனர்.

காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமோ www.itukama.lk, http://www.itukama.lk/ என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடனோ தொடர்புகொண்டு பங்களிப்பைச் செய்யமுடியும். அத்துடன் 0760700700/ 0112320880/ 0112354340/ 011 2424012 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

# ஊன்றுகோல் வழங்கல்

கிளிநொச்சி, ஜுலை 24

யுத்தத்தில் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகள் 32 பேருக்கு கரைச்சி பிரதேச மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் செயலாளர் மு. நெல்சனால் ஊன்றுகோல்கள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதியுதவி மருத்துவர் ஆருணி வேலழகன் மற்றும் திருமதி பிரார்த்தனா சுமன் ஆகியோரால் வழங்கப்பட்டது. (ரி1-222)



# கொரோனாத் தொற்றாளர் ஒருவர் அடையாளம்

கொழும்பு, ஜுலை 24

நாட்டில் நேற்றைய தினம் ஒரேயொரு புதிய கொரோனா தொற்றாளர் மாத்திரம் அடையாளம் காணப்பட்டுள்ளார் என கொவிட்19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவிலிருந்து நாடு திரும்பி, தனிமைப்படுத்தல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த ஒருவரே இவ்வாறு புதிய தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த நிலையில் நாட்டின் தற்போதைய மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 2,753 ஆக அதிகரித்துள்ளது. (ரி2)

# ரதத்தில் வந்தடைந்தது நல்லூரானின் கொடிச்சீலை

படங்கள் - ஐ.சிவசாந்தன்









வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவ பெருவிழா நாளை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் கொடியேற்றத் துக்கான கொடிச்சீலை எடுத்துவரும் சம்பிரதாயபூர்வ நிகழ்வு இன்று நடைபெற்றது. செங்குந்தர் பரம்பரையின ரால் நல்லூர் ஆலயக் கொடியேற்றத்திற்கான கொடிச்சீலை சம்பிரதாயபூர்வமாக ஆலயத்தில் ஒப்படைக்கப்படுவது வழக்கமாகும். அதன் படி யாழ். சட்டநாதர் சிவன் ஆல யத்திற்கு அருகில் உள்ள வேல் மடம் முருகன் ஆலயத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுக ளைத் தொடர்ந்து அங்கிருந்து கொடிச்சீலை சிறிய ரதத்தின் மூலம் பருத்தித்துறை வீதி ஊடாக எடுத்துச் செல்லப்பட்டு காலை 9.30 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை வந்தடைந்தது. அங்கு சுபநேரத்தில் பூஜைகள் இடம்பெற்று கொடிச்சீலை நல்லூர் ஆலய பிரதம குருக்களிடம் கைய ளிக்கப்பட்டது. (ரி1)

# சாவகச்சேரியில் மஞ்சள் 5,000/=

சாவகச்சேரி ஜுலை 24

மஞ்சள் ஒரு கிலோ 5 ஆயிரம் ரூபா வாக சாவகச்சேரியில் விற்பனை செய்யப்படுகிறது. கொரோனா காலத் தில் மஞ்சளுக்கு ஏற்பட்ட கிராக்கி யாலும் மஞ்சள் இறக்குமதி இல்லாத தாலும் விலை அதி கரித்துள்ளது என வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ரி-19)

# இந்திய இளைஞர் உட்பட மூவரின் சடலங்கள் மீட்பு

கொழும்பு, ஜுலை 24

இந்திய இளைஞர் உட்பட மூவர் வெவ்வேறு பகுதிகளில் நேற்றைய தினம் சடலங்களாக மீட்கப்பட்டுள்ள னர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரி வித்துள்ளது.

வெலிகந்த பகுதியில் 49 வயதுடைய நபர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலை யில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அதேபோல் மின்னேரிய பகுதியில் உயிரிழந்த நிலையில் 59 வயதுடைய நபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட் டுள்ளார். அத்துடன் வெள்ளவத்தை பகுதியில் 25 வயதுடைய இந்திய இளைஞர் ஒருவர் வீடொன்றில் உயிரி ழந்த நிலையில் சடலமாக மீட்கப் பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஆரம்ப கட்ட விசாரணைகளில் இவர்கள் மூவரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ரி3)

# சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு புள்ளிகள்; மீண்டும் அமுல்

கொழும்பு, ஜுலை 24



இலங்கையில் சாரதி அனுமதிப்பத்திரங்க ளுக்குப் புள்ளிகள் வழங்கும்முறை மீண் டும் அமுல்படுத்தப் படவுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமர வீர தெரிவித்துள்ளார்.

வாகன மற்றும் வீதி விபத்துக்களின் போது சாரதிகளுக்கு அபராதம் மற்றும் தண்டனை வழங்கப்படுவது தற்போது நடைமுறையில் உள்ளது. இந்த விதிமுறை களுடன் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு புள்ளிகள் வழங்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தவுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்றிற்கு 24 புள்ளிகள் வழங்கப்படும். சாரதிகளால் வீதி விதிமுறைகள் மீறப்ப டுகின்றபோதும், விபத்துக்களை ஏற்ப டுத்துகின்றபோதும் இப் புள்ளிகள் குறைக்கப்படும் என அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். (ரி3)

# போதைப்பொருளடங்கிய முத்திரைகளுடன் இளைஞர் கைது

கொழும்பு, ஜுலை 24

கொள்ளுப்பிட்டிப் பகுதியில் அமைந் துள்ள விடுதி ஒன்றில் போதைப்பொரு ளடங்கிய முத்திரைகளுடன் இளைஞ ரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொள்ளுப்பிட்டி பொலிஸ் பிரிவிக் குட்பட்ட பகுதியில் பொலிஸ் போதைப்பொருள் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்றையதினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்த இளை ஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள் ளது. வெள்ளவத்தை பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட் டுள்ளார். இவரிடமிருந்து செயற்கை யாக தயாரிக்கப்பட்ட போதைப் பொருள் அடங்கிய (எல்.எஸ்.டி) முத்தி ரைகள் 3150 கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரை எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேல திக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் பிரிவினர் மேற் கொண்டு வருகின்றனர். (ரி3)

# உணவகங்களில் மஞ்சளுக்கு பதிலாக நிறச்சாயம்

கொழும்பு, ஜுலை 24

இலங்கையில் மஞ்சள் தூளுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் உணவகங்களில் மஞ்சள் தூளுக்குப் பதிலாக நிறச் சாயத் தைப் பயன்படுத்தி உணவுகள் தயாரிக்கப்படும் மோசடி நடவடிக்கை ஆரம் பிக்கப்பட்டுள்ளது என்று உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய அமைப்பா ளர் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு மஞ்சள் தூளுக்கு பதிலாக நிறச்சாயம் பயன்ப டுத்துவதற்கான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட் டுள்ளார். இதேவேளை, மக்கள் பயன்படுத்தும் தேயிலை தூள் மற்றும் மசாலா தூளின் தரம் தொடர் பிலும் பெரும் சிக்கல் ஏற்பட் டுள்ளதாகவும் அவர் கூறி யுள்ளார்.

இவ்வாறான மோசடிகள் குறித்து பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள் ளார். (ரி2)

# நானாட்டானில் புதிய சோதனைச்சாவடி

மன்னார், ஜுலை 24



மன்னார் நானாட்டான் சந்தியிலிருந்து முத்தரிப்புத்துறை செல்லும் வீதியில் கடந்த சில நாள்களாக இராணுவ பொலிஸ் சோதனைச்சாவடி ஒன்று புதிதாக அமைக்கப் பட்டு போக்குவரத்து வாகனங்கள் சோதனைசெய்யப்பட்டு வருகின்றன. (ரி1-213)

# மனித உரிமைக்கு மதிப்பளிக்கும் சமூகத்தை தோற்றுவிக்கும் பொறுப்பு ஊடகங்களிடம்!

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 24

பொதுத்தேர்தலின் போது ஊடகங்கள் பிற்போக்கின்றிய ஊடக செயற்பாட்டின் மூலம் தமது பெரும் பொறுப்பை நிறைவேற்றுவார்கள் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு மிக உயர்ந்த எதிர்பார்ப்பொன்றை இலங்கையின் ஊடகத்துறை மீது கொண்டுள்ளது. இது தொடர்பில் தமது முனைப்பானதும் நடுநிலையானதுமான தலையீட்டை, முன்னேறிய ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சமூகமொன்றைத் தோற்றுவிப்பதற்காக ஊடகங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றி சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள வழிகாட்டல்களை ஊடகங்கள் நிச்சயம் பின்பற்ற வேண்டும் என மேற்படி ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது. இதுதொடர்பில் ஆணைக்குழுவின் தலைவர் தீபிகா உடகமவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

அனைத்து ஊடக நிறுவனங்களும் சமூகத்தில் அல்லது அரசியல் செயற்பாட்டாளர்களிடையே வெறுப்பூட்டும் அரசியலை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகளைத் தவிர்த்தல் வேண்டும். இதனடிப்படையில் இலங்கையில் காணப்படும் மத நம்பிக்கைகள், சமய பின்பற்றுதல்கள், பேச்சு, மொழி, இனம் , பழக்கவழக்கங்கள் , குலம், கோத்திரங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களை அடிப்படையாகக்கொண்டு நாட்டு மக்களிடையே வெறுப்பூட்டும் மற்றும் பொறுமையிழக்கச் செய்யும் வகையிலான பிரசாரங்களை ஒலி அல்லது ஒளி பரப்புதல், பிரசுரித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் உயிரோட்டத்தைப் பாதுகாப்பதற்காக எவரும் விடுபடாத தேர்தலொன்றை நடத்துதல் அத்தியாவசியமானதாகும். பொதுமக்களிடத்தில் அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களின் கருத்துக்களை எடுத்துச்செல்லும்போது பிரதான ஊடகமாக வெகுசன ஊடகங்களுக்கு பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் மக்களுக்கு தமது கருத்துக்களை எடுத்துச்சென்றாலும் வாக்காளருக்கு தேர்தலில் தமது அரசியல் கருத்தை வாக்குச்சீட்டின் ஊடாக சுதந்திரமாகவும் நீதியாகவும் அழுத்தங்களின்றி வெளியிடும் வாய்ப்புக்கு வெகுசன ஊடகங்கள் இடையூறு விளைவிக்கக்கூடாது. இங்கு நாட்டில் நிலவும் பன்முகத் தன்மைக்கு தீங்கு ஏற்படும் வகையில் சமூகத்தில் பிளவை ஏற்படுத்தும் செய்திகளை வெளியிடுவதைத் தவிர்ந்து நடத்துதல் தொடர்பாக வெகுசன ஊடகங்களுக்கு மிகப் பெரிய பொறுப்பு உண்டு - என்றுள்ளது. (ரி3)



சுமார் 5 வார காலத்தில்

## சுற்றிவளைப்புகளில் கைதானோர் தொகை ஒரு லட்சத்தை அண்மிப்பு

கொழும்பு, ஜூலை 24

கடந்த ஜூன் மாதம் 16ஆம் திகதி முதல் இன்று வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது, பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 90 ஆயிரத்து 862 பேர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள், ஆயுதங்கள், வெடிபொருள், சட்டவிரோத மதுபானம் என்பன வைத்திருந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இந்தச் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட 17 ஆயிரத்து 913 பேரும், ஏனைய குற்றங்களை இழைத்த குற்றச்சாட்டுகளில் 33 ஆயிரத்து 269 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, ஹெரோய்ன் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 ஆயிரத்து 480 பேரும், கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 8 ஆயிரத்து 229 பேரும், ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 662 பேரும் ஆயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 184 பேரும், வெடிபொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 18 பேரும், சட்டவிரோத மதுபானம் வைத்திருந்த குற்றச்சாட்டில் 19 ஆயிரத்து 107 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புகளின்போது ரி56 வகைத் துப்பாக்கிகள் 13, ரி81 வகைத் துப்பாக்கி 1, 12 துளைகொண்ட துப்பாக்கிகள் 51, கைத்துப்பாக்கிகள் 5, நாட்டுத் துப்பாக்கிகள் 29, ரிபீட்டர் வகைத் துப்பாக்கிகள் 92, ரிவோல்வர் வகைத் துப்பாக்கிகள் 2 மற்றும் ஏனைய வகையான துப்பாக்கிகள் 2, தோட்டாக்கள் 1749, வாள்கள் 11, கத்திகள் 7 ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி3)

## தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்

வவுனியா, ஜூலை 24

தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் இன்று காலை இடம்பெற்றது.

இக் கலந்துரையாடல் "சமாதானமான தேர்தலை நோக்கி" என்ற தொனிப்பொருளின் கீழ் கபே அமைப்பின் ஏற்பாட்டில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மனோராஜ் தலைமையில் நடைபெற்றது. கண்காணிப்பு தொடர்பான தெளிவுபடுத்தல், தேர்தல் விதிமுறைகள் , சுகாதார நடைமுறைகள் போன்றன பற்றி இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது.

சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் , கண்காணிப்பாளர்கள் , இளைஞர்கள் என பலரும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டிருந்தனர். (ரி1-18)





## கமநல அமைப்புக்கு புதிய உரக் களஞ்சியம்

### மறவன்புலவில் இன்று அடிக்கல் நடுகை

சாவகச்சேரி, ஜூலை 24

தென்மராட்சி தெற்கு காற்றாலை நிறுவனத்தினரால் மறவன்புலவு கமநல அமைப்புக்கு உரக்களஞ்சியம் அமைத்து வழங்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு, மறவன்புலவு கமநல அமைப்பு வளாகத்தில் இன்று காலை இடம்பெற்றது.

இந் நிகழ்வானது, மறவன்புலவு கமநல அமைப்பின் தலைவர் சி.திருஞானசம்பந்தர் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் காற்றாலை நிறுவனப் பிரதிநிதிகள், கைதடிப் பிரதேச கமநல சேவைகள் நிலையப் பெரும்போக உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர். உரக் களஞ்சியம் அமைக்கப்பட்டதும் எதிர்காலத்தில் களஞ்சியத்தில் வைத்து விவசாயிகளுக்கு உரவகைகள் விநியோகிக்கப்படும் என்று மறவன்புலவு கமநல தலைவர் தெரிவித்தார். (ரி2-9)

## தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூவர் வைத்தியசாலையில்!

சாவகச்சேரி ஜூலை 24

தென்மராட்சிபிரதேசத்தில் இடம்பெற்ற வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவங்கள் நேற்றிரவு இடம்பெற்றுள்ளன.

கிளாலியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 25 வயது இளைஞரும், நுணாவில் மேற்கில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 64 வயது முதியவரும், மீசாலை வடக்கில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 20 வயது இளைஞரும் காயமடைந்துள்ளனர். (ரி1-9)

## வைக்கோல் எரிப்பதை தடைசெய்யக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூலை 24

கிளிநொச்சி மாவட்டத்தில் வைக்கோலை வீதி ஓரங்களிலும், வயல் நிலங்களிலும் எரிப்பதால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பலபோக பயிர்ச் செய்கை நிறைவு பெற்றுள்ளதால் இவ்வாறான செயற்பாடுகள் அதிகம் இடம்பெறுகின்றன.

வயல் நிலங்களில் வைக்கோலை எரிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது என்று பல கூட்டங்களில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டாலும், அவை நடைமுறையில் இல்லாது போயுள்ளன என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பிரதான வீதி ஓரங்களிலுள்ள வயல் நிலங்களில் வைக்கோல் எரிக்கப்படும்போது எழும் புகை மூட்டம் காரணமாக வீதியால் செல்லும் பயணிகள் பல நோய்த் தாக்கங்களுக்குள்ளாகின்றனர் மற்றும் வீதி விபத்துக்கள் அதிகம் இடம் பெறுகின்றன எனவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ரி1-113)

# சுற்றறிக்கைக்கு ஏற்ப செயற்பட சுகாதாரப் பரிசோதகர்கள் இணக்கம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

தனிமைப்படுத்தல் சட்டத்தின் விளைவு மற்றும் சில துறைசார் அதிகாரங்களைத் தகுதிவாய்ந்த அதிகாரத்தின் கீழ் மேற்பார்வை மற்றும் அவர்களது உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு, தற்போதுள்ள தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின் விதிகளைத் திருத்தாமல் திணைக்களச் சுற்றறிக்கைக்கு ஏற்ப பகிர்ந்து கடைப்பிடிக்க பொது சுகாதார பரிசோதகர்கள் இணங்கியுள்ளனர் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே சுகாதார அமைச்சு இந்த விடயம் தொடர்பில் விரைவாக செயற்பட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை வெளியிடும் படி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோருவதாக அதன் மத்திய மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் விசேட வைத்தியர் வாசன் இரத்தினசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;


புதன்கிழமை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் ஆகியவற்றுக்கு இடையே விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

தற்போதுள்ள தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின் விதிமுறைகள் மற்றும் வெளிவரவுள்ள தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்புக்கு ஏற்ப மேற்குறிப்பிட்ட முறையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் கொவிட்19 தொடர்பான நிர்வாக நடவடிக்கைகளைச் செயற்படுத்த பொது சுகாதார பரிசோதகர்களின் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, சுகாதார அமைச்சு இந்த விடயம் தொடர்பில் விரைவாக செயற்பட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை வெளியிடும்படி அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் கோருகின்றது. கொரோனா நோயைக் கட்டுப்படுத்தி சரியான மட்டத்தில் பேணுவதற்காக சகல தரப்பினரும் உச்ச ஆதரவை நல்குவது தேசிய பொறுப்பாகும் - என்றார். (ரி2)

# அங்கொட லொக்கா கொலை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 24



கொலை, கொள்ளை, கப்பம் கோரல் உள்ளிட்ட பல திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த, பிரபல பாதாள உலகத் தலைவன் அங்கொட லொக்கா என அறியப்படும் மத்துமகே லசந்த சமிந்த பெரேரா, இந்தியாவில் நஞ்சூட்டி கொலை செய்யப்பட்டுள்ளார் எனக் கூறப்படும் தகவலின் உண்மைத் தன்மையை அறிவியல் ரீதியாக உறுதி செய்து கொள்ள விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அங்கொட லொக்கா உயிரிழந்தமை தொடர்பில் உத்தியோகபூர்வ தகவல்கள் எமக்கு கிடைக்கவில்லை. அவர் உயிரிழந்துள்ளமை தொடர்பில் அறிவியல் ரீதியாக உறுதிப்படுத்தப்படுமிடத்து அது தொடர்பில், அவருக்கு எதிரான நீதிமன்றங்களுக்கு அதனை அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்போம்.

சில நேரம் அவர் அவரது உருவத்தை மாற்றி மீள இலங்கைக்கு வந்து குற்றங்களில் ஈடுபடவோ அல்லது வெளிநாடொன்றுக்கு பாதுகாப்பாக சென்று மறைந்திருக்கவோ கூடும். தான் மரணித்து விட்டதாக நம்பவைக்க நாடகம் ஆடுகின்றாரா என்ற சந்தேகமும் உள்ளது. அது குறித்தும் அவதானம் செலுத்தி சிறப்பு விசாரணை செய்கின்றோம் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் மேலும் தெரிவித்தார். மிரிஹானையில் உள்ள மேல் மாகாண தெற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ரி2)

# எலிக் காய்ச்சல் பாதிப்பு எண்ணிக்கை அதிகரிப்பு

## விவசாயிகளுக்கு சில ஆலோசனைகள்

கொழும்பு, ஜூலை 24

இலங்கையில் இந்த ஆண்டு எலி காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

எதிர்பாராத வானிலை, பருவமழை தொடர்பான மாற்றங்கள் மற்றும் கைவிடப்பட்ட வயல்களில் வேலை செய்வது போன்ற காரணங்களினாலேயே எலி காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் ஆலோசகர், தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் மஞ்சுலா கரியவாசம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,


ஜூன் நடுப்பகுதியில், இந்த நோய் குறித்த சந்தேகத்துக்கிடமானவர்களின் எண்ணிக்கை 3,500 ஆக இருந்தது. இரத்தினபுரி 25.3 சதவீத நோய்த்தொற்றுகள் அதிகம் உள்ள இடமாக மாறியுள்ளது. அத்துடன், களுத்துறை, கேகாலை, காலி, பதுளை, கொழும்பு, அனுராதபுரம், ஹம்பாந்தோட்டை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் விவசாயிகள் சம்பந்தப்பட்ட 40% தொற்று நோய்களை அவர் பட்டியலிட்டுள்ளார்.

விவசாய நடவடிக்கைகள் இல்லாமல் 10 ஆண்டுகளுக்கு மேலாக பொதுமக்கள் தங்களது கைவிடப்பட்ட நிலங்களில் அண்மையில் பயிரிடத் தொடங்கியுள்ளனர். இதனால் பொதுமக்கள் பாக்டீரியாவால் எளிதில் பாதிக்கப்படுகின்றனர். இந்தநிலையில், விவசாயிகள், இரத்தின சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் வடிகால்களில் பணிபுரியும் நபர்கள் அருகிலுள்ள சுகாதார அலுவலரிடமிருந்து முன் சிகிச்சையைப் பெறுவது மிக முக்கியமானதாகும். இந்த சிகிச்சை வாரத்திற்கு ஒரு முறை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிகிச்சைகள் பெறுவதில் தாமதம் ஏற்படும் போது கடுமையான விளைவுகளுக்கு வழிவகுக்கும் அல்லது முக்கிய உள் உறுப்புகளுக்கு ஏற்படும் சேதத்தால் மரணம் ஏற்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ரி2)

# கொரோனா பரிசோதனைக்கு தானியங்கி ரோபோ

## தமிழர் தலைமையில் டென்மார்க் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கம்



கொபன்ஷேகன், ஜூலை 24

கொரோனா வைரஸ் பரிசோதனைக்காக தொண்டையில் இருந்து ஒட்டியெடுக்கப்படும் மாதிரிக்கான தானியங்கி ரோபோவை டென்மார்க் தெற்கு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இலங்கைத் தமிழர் ஒருவரை தலைமையாளராகக் கொண்ட டென்மார்க் தெற்கு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்களால் இந்த ரோபோவை உருவாக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உலகின் முதன் முதலாக இந்தத் தானியங்கி ரோபோ உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் சுகாதார வல்லுநர்கள் நோய்த் தொற்று அபாயத்திற்கு ஆளாக மாட்டார்கள் என்பது ஆராய்ச்சியில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுமார் நான்கு வாரங்களில் தெற்கு டென்மார்க் பல்கலைக்கழகத்தின் சிறந்த ரோபோடிக் ஆராய்ச்சியாளர்கள் குழு, உலகின் முதல் முழுமையான தானியங்கி ரோபோவை உருவாக்குவதில் வெற்றிபெற்றுள்ளது. இந்த ரோபோ தொண்டையில் சரியான இடத்தை அடைகின்றது. பின்னர் அதிலிருந்து மாதிரியை சேகரிக்கின்றது. அதைத் தொடர்ந்து இந்த ரோபோ சேகரித்த மாதிரியை கண்ணாடி குடுவைக்குள் வைத்து முத்திரையிட மூடியை திறக்கின்றது. இந்த நிலையில் ரோபோ எவ்வளவு மென்மையாக தொண்டையில் இறங்குகின்றது என்பது தமக்கே ஆச்சரியமாக இருந்ததாக ஆராய்ச்சிக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட யாழ். வடமராட்சியை சேர்ந்த புலம்பெயர் தமிழர்களின் இரண்டாம் தலைமுறை வைத்தியரான தீசியஸ் ரஜித் சவரிமுத்து தெரிவித்துள்ளார். (ரி2)

# நல்லூரானைத்...

பங்கேற்க ஆலயத்துக்கு வரும் அடியவர்கள் அனைவரும் ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட சோதனைச் சாவடியில், அடையாள அட்டையினை காண்பித்த பின்னரே ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

அத்தோடு வெளிநாட்டிலிருந்து வந்தவர்களாக இருந்தால் அவர் தனிமைப்படுத்தலுக்குட்பட்டவர் என்ற சான்றிதழைக் காண்பித்த பின்னரே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.

அத்தோடு அடியவர்கள் அனைவரும் 'மாஸ்க்' அணிந்தே ஆலயத்துக்கு வருகை தர வேண்டும். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும் முகமாக கைகளை நன்றாகக் கழுவி, வெப்பநிலை உடல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அடையாள அட்டை மற்றும் அவர்களது முகம் கமராவில் பதிவு செய்யப்பட்ட பின்னரே ஆலயத்துக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள். இம்முறை நல்லூர் உற்சவத்தின் போது, சுகாதார நடைமுறைகள் கடுமையாகப் பின்பற்றப்பட்டு மிகுந்த கட்டுப்பாடுகளுடன் இடம்பெறவுள்ளதால், பக்தர்கள் பெருமளவில் வருவதைதவிர்க்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ,20)

## இராஜாங்கனையில்

கொரோனா வைரஸ் தொற்றின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
ஹரித அலுத்கே மேலும் கூறியுள்ளதாவது, “கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தோன்றிய, கொரோனா வைரஸ் தொற்றின் இரண்டாவது அலை உருவாக்க இருந்த ஆபத்து வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது.
எனினும் இராஜாங்கனை பகுதியில் மூன்றாவது அலை பதிவாகியுள்ளதாக தற்போது தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. ஆனால் கொரோனாத் தொற்றாளர்களாக இதுவரை அங்கு எவரும் அடையாளம் காணப்படவில்லை” என அவர் குறிப்பிட்டுள்ளார்.
இராஜாங்கனை பகுதியில் இதுவரை சுமார் 8ஆயிரத்து 500பேர் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.(அ)

# ஒற்றையாட்சிக்குள்ளேயே....

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜ பக்ச தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"ஒற்றையாட்சிக்குள்தான் தீர்வு. இந்தச் சொற்பதத்தில் மாற்றத்தை ஏற்படுத்த மாட்டோம். சம்பந்தன் அணியினரும் சஜித் அணியினரும் கூறும் ஒருமித்த நாடு என்ற சொற்பதத்தை ஏற்கவேமாட்டோம். ஏனெனில் ஒருமித்த நாடு என்ற சொற்பதத்துக்குள் சமஷ்டித் தீர்வை- தன்னாட்சித் தீர்வை -உருவாக்க முடியும். எதிரணிகளின் இந்தத் திருட்டுத்தனம் பற்றி நாம் மிகவும் அவதானமாக இருக்கின்றோம்.
அதுதான் ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். சொற்பதங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியாவது இலக்கை அடைய வேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் விடாப்பிடி யாக உள்ளனர். அது தான் அவர்கள் ஒருமித்த நாடு என்ற சொற்பதத்தைத் தூக்கிப்பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதற்கு சஜித் அணியினரும் ஒத்தாசை புரிகின்றார்கள். உயர்நீதிமன்றம் முன்னர் வழங்கிய தீர்ப்பைக் காரணம் காட்டி நாட்டைப் பிளவுபடுத்த நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்" என்றார். (அ-22)

## இராணுவ அதிகாரியே...

தொடர்ந்து, வடக்கு மாகாண ஆளுநராகப் புதியவர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது. இந்தநிலையில், வன்னி ஆயுதப்படைகளின் கட்டளைத் தளபதியாகவும், புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான அதிகாரியாகவும் கடமையாற்றிய இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் பொனிபேஸ் பெரேரா வடக்கின் புதிய ஆளுநராகப் பொறுப்பேற்கவுள்ளார் என ஜனாதிபதிக்கு நெருங்கிய தரப்புகள் தெரிவித்துள்ளன.(அ)

## தேர்தலை நடத்த...

வாக்களிக்கும் மத்திய நிலையங்களின் பாவனைக்காக கொள்வனவு செய்யப்பட்டுள்ள கைகழுவும் கிருமி நீக்கும் திரவம், முகக்கவசம் மற்றும் கைகளில் மை தடவுவதற்கு பயன்படுத்தப்படும் மெழுகுக் குச்சி என்பன அந்த மாவட்டங்களுக்கு நேற்று வியாழக்கிழமையே அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரி யொருவர் குறிப்பிட்டுள்ளார்.
வாக்கெண்ணும் மத்திய நிலையங்களின் பயன்பாட்டிற்காக உடல் வெப்பநிலையை அளவீடு செய்யும் 60 வெப்பமானிகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. தேர்தல்கள் செலவுக்காக 100 கோடி ரூபா மத்திய திறைசேரியினால் தற்போது பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)

## குடும்பஸ்தரின்...

பாம் பகுதியைச் சேர்ந்த மோகன் சிவகுமார் (வயது 35) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். இவர் கிடாச்சூரி பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கிநின்று கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வந்திருந்தார்.
இந்நிலையில் நேற்றையதினம் இரவு வீட்டின் பின்பகுதியில் இருந்து அவர் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.அவர் வீட்டின் முதலாம் மாடியிலிருந்து தவறி வீழ்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.சடலம் உடற்கூற்று பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.இந்தச் சம்பவம் தொடர்பாக ஈச்சங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ,110)

## சுமந்திரனின்...

கோட்டை பொலிஸார் தெரிவித்தனர். சுழிபுரம், வழக்கம்பரை சந்தியில் நின்று இவர்கள் இருவரும் தேர்தல் பிரசார 'ஸ்டிக்கர்களை' ஒட்டிக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டுள்ளனர். இதன் போது 450 ஸ்ரிக்கர்கள், மற்றும் மாதிரி வாக்குச்சீட்டு என்பன கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பல்கலைக்கழக மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.
இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ,25,26)

## கொரோனா நோயாளி தப்பிப்பு;

ஏற்பட்டது.இருப்பினும் பின்னர் அவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் வைத்து கண்டு பிடிக்கப்பட்டார். போதைக்கு அடிமையாகிய நிலையில் அங்கொடை ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த கொரோனா தொற்றுடைய திருகோணமலை சீனன்குடா, மாபிள் பீச் ரோட்டைச் சேர்ந்த முகமட் ஹசிம் முகமட் நசீம் என்ற நபர் ,வைத்தியசாலையில் இருந்து தப்பிச்சென்றுள்ளார் என்று இன்றுகாலை பொலிஸ் பேச்சாளர் தெரிவித்திருந்தார்.
இந்நிலையில் குறித்த சந்தேகநபரை கண்டுபிடிப்பதற்காக பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியிருந்தனர். அத்தோடு தப்பிச் சென்ற கொரோனாத் தொற்றாளரைக் கண்டுபிடிப்பதற்கு புலனாய்வுப் பிரிவினர் மற்றும் இராணுவ குழுக்கள் நியமிக்கப்பட்டு தேடுதல் வேட்டையும் ஆரம்பித்திருந்தது. இந்த நிலையிலேயே குறித்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் வைத்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.அதனையடுத்து அவர் கந்தகாடு புனர்வாழ்வு முகாமுக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (அ)

## விக்னேஸ்வரனிடம்...

கப்படுகின்றது. யாழ்ப்பாணம் ,நல்லூர் ,கோயில் வீதியில் அமைந்துள்ள முன்னாள் முதலமைச்சரின் இல்லத்துக்கு இன்று (வெள்ளிக்கிழமை) காலை திடீரெனச் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் தலைமையிலான சி.ஐ.டி. குழுவினரே இந்த விசாரணையை முன்னெடுத்தனர்.
கடந்த டிசெம்பர் மாதம் முதலமைச்சரால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்று தொடர்பாகவே இதன்போது அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.
உடனடியாகவே இது தொடர்பான ஆவணத்தை கையளித்த விக்னேஸ்வரன், அதில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பாக தான் உறுதியாக இருக்கிறார் எனவும் தெரிவித்தார்.
மேலும் விக்னேஸ்வரன் தெரிவித்த தகவல்களின் அடிப்படையில் மேலிடத்துக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிப்பதாகத் தெரிவித்த பொலிஸ் அதிகாரி, தேவை ஏற்பட்டால் தேர்தலுக்குப் பின்னர் மீண்டும் விசாரணைக்கு வருவதாகவும் தெரிவித்துச் சென்றுள்ளார் எனக் கூறப்படுகிறது. குறிப்பிட்ட அறிக்கை சிங்கள இணையத்தளம் ஒன்றில் வெளியாகியிருந்ததுடன், இனங்களிடையே குழப்பத்தை ஏற்படுத்துவதாக அந்த அறிக்கை அமைந்திருந்ததாகவும் சர்ச்சை எழுந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ,106)

## பாரவூர்தி...

பொலிஸார் தெரிவித்தனர். கிளிநொச்சி, ஜெயபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, மன்னார்- யாழ். வீதியில் பாரவூர்தி ஒன்று, எவ்வித சமிக்ஞையும் இல்லாமல் தரித்து நின்றுள்ளது.
இந்தநிலையில் யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த சொகுசுவாகனம், நிறுத்திவைக்கப்பட்டிருந்த பாரவூர்தியைக் கவனிக்காமல் வந்த வேகத்தில் அதனோடு மோதியதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.
இந்த விபத்தில் சொகுசுவாகனத்தில் பயணித்த மூவரில் சாரதிக்கு அருகில் இருந்து பயணித்தவரான, யாழ்ப்பாணம், மல்லாகம் பகுதியைச் சேர்ந்த சுவேந்திரன்(வயது 43) என்பவர் உயிரிழந்தார். சாரதியும், இன்னொருவரும் காயமடைந்தனர். உயிரிழந்தவரின் சடலம் முழங்காவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை ஜெயபுரம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(அ,35)

## பாவம்...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
வைத்தியசாலையில் இருந்து தப்பித்த கொரோனா நோயாளி, கோட்டை, பிரதான வீதியில் இருந்து முச்சக்கரவண்டி ஒன்றின் மூலமே கொழும்பு தேசிய வைத்தியசாலை நோக்கிப் பயணித்துள்ளார்.அப்படிப் பயணித்த முச்சக்கர வண்டியின் சாரதியும் கண்டுபிடிக்கப்பட்டு, அவரும் கந்தகாடு தனிமைப்படுத்தல் மையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.(அ)

## புதினம்? தெரியுமோ

அபிவிருத்திச் சபை II பேரின்ர கையொப்பத்தோட ஒரு மறுப்பு அனுப்பியிருக்கினம். நாணயத்துக்கு ரண்டு பக்கம் இருக்கிற மாதிரி, இந்த விசயத்துக்கும் இன்னொரு பக்க நியாயம் இருக்கும் தானே. அதைச் சொல்ல வழி செய்யிறதுதானே பட்சியின்ர வேலை. அதால அவை அனுப்பின மறுப்பை இங்க தாறம்.
எமது பாடசாலையில் நடைபெறும் திறன்விருத்தி வகுப்பறை வேலைத் திட்டம் தொடர்பில் வெளியிடப்பட்ட செய்தியினால் பாடசாலைச் சமூகத்தில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.
எமது பாடசாலையில் சுற்றறிக்கைக்கு முரணாக பழைய மாணவர் சங்கம் 2017ஆம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்டு கடந்த 3 ஆண்டுகள் பொதுக்கூட்டம் நடத்தப்படாதுள்ளது. பழைய மாணவர் சங்கம் காலாவதியாகியுள்ள நிலையில் 2017இல் தெரிவு செய்யப்பட்ட நபர் ஒருவர், பாடசாலையின் சகல நிர்வாக விடயங்களிலும் தலையிட்டுத் தேவையற்ற அழுத்தங்களைக் கொடுத்து வந்ததுடன் ,நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பாடசாலையில் மேற்கொள்ளப்பட்டு வந்த மூன்று மாடிக் கட்டட வேலைகளில் உப ஒப்பந்தக்காரராக, பாடசாலை நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தாது செயற்பட்டுப் பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்தி வந்துள்ளார்.
அத்துடன் அதிபரின் அனுமதியின்றிப் பாடசாலையினுள் பிரவேசித்தல், அடிக்கடி நிர்வாகத்தினருடன் முரண்படுதல், பாடசாலை ஆளணியினரை அவமதிக் கும் செயற்பாடுகளில் ஈடுபடுதல், தேவையற்ற தொடர்பாடல்களில் ஈடுபடுதல் போன்ற பல தவறுகளைத் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளார்.
2019ஆம் ஆண்டு தேவாலய குண்டு வெடிப்புச் சம்பவம், 2020 கொரோனா விடுமுறை காலம் ஆகியவற்றின்போது பாடசாலையில் கூட்டங்கள், விழாக்கள் என்பவற்றை நடத்தக் கூடாது என்ற கல்வியமைச்சின் சுற்றுநிருபங்களுக்கு அமைவாகவே பாடசாலைகள் செயற்பட வேண்டும் என்பது யாவரும் அறிந்த விடயமாகும்.
எனவே இக்காலப்பகுதியில் நடைபெறும் சகல நிகழ்வுகளும் உரிய கூட்டத் தீர்மானத்திற்கமைவாகப் பாடசாலை மட்டத்திலேயே நடைபெற்றன.
தற்போது நடைபெறவுள்ள திறன்விருத்தி வகுப்பறை விடயத்திலும் உண்மைக்குப் புறம்பான தகவல்களை அந்நபர் வெளியிட்டுள்ளார். வகுப்பறைகளை அமைத்துத் தரவுள்ள பழைய மாணவரின் குடும்பத்தினர் பாடசாலை அபிவிருத்திக் குழு ஆகியவையே இவ்வேலைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதையும் பழைய மாணவர்களிடம் இவ்வேலையைத் தாம் வழங்க விரும்பவில்லை என்பதையும் உறுதிபடத் தெரிவித்துத் தமது சம்மதத்தை எழுத்து மூலம் வழங்கியுள்ளனர். அதன்பின்னரே உரிய கூட்டத்தை நடாத்தி இவ்வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான அனுமதிக்கு உரிய ஆவணங்களு டன் கோரியிருந்தோம். உரிய முறைப்படி பழைய கட்டடத்தை அகற்றுவதற்கும் புதிய கட்டடத்தை அமைப்பதற்கும் தேவையான சகல ஆவணங்களும் அனுப்பப்பட்டு அனுமதி கிடைக்கப்பட்ட பின்னரே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுதான் அவை அனுப்பின விளக்கம். இந்த விளக்கம் சரிமாதிரித்தான் பட்சிக்கு படுகுது. உங்களுக்கு?

– பட்சி

1945 நாஜி காலத்து குற்றச் செயல்கள்

## 93 வயது ஜெர்மனியருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

பெர்லின், ஜூலை 24

இரண்டாவது உலகப் போரில் நாஜி வதை முகாம் ஒன்றில் பல யூதர்கள் உட்பட 5,232 பேரைக் கொலை செய்வதற்கு உதவியவர் என்ற குற்றத்தில் 93 வயது ஜெர்மனியர் ஒருவருக்கு இரண்டு ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நாஜி காலத்து குற்றச் செயல்கள் குறித்து இடம்பெற்ற கடைசி வழக்கு விசாரணைகளில் ஒன்றாக இது உள்ளது.

இன்றைய போலந்துக்கு அருகில் இருந்த வதை முகாம் ஒன்றில் ப்ரூனோ டி என்பவர் காவலராக இருந்துள்ளார். இங்கு 1944 ஓகஸ்ட் தொடக்கம் 1945 ஏப்ரல் வரை இடம்பெற்ற கொலைகளுக்கு இவர் உடந்தையாக இருந்ததாக ஹம்பர்க் நீதிமன்றத்தால் நேற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்த முகாமில் தாம் இருந்ததை அவர் ஒப்புக்கொண்டபோதும் இத்தனை குற்றங்கள் புரியவில்லை என்று அவர் மறுத்துள்ளார். அப்போது 17 அல்லது 18 வயதாக இருந்த ப்ரூனோவுக்கு சிறுவர் குற்றங்கள் அடிப்படையிலேயே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ரி1)





## கொரோனாப் பாதிப்பு உலகளவில் 1 கோடி 56 லட்சம் +

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 1 கோடியே 56 லட்சத்தை கடந்துள்ளது.

இன்று காலை நிலவரப்படி, உலகம் முழுவதும் 1 கோடியே 56 லட்சத்து 54 ஆயிரத்து 428 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களில் இது வரை 95 லட்சத்து 35 ஆயிரத்து 616 பேர் சிகிச்சைக்கு பின் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இருப்பினும், கொரோனாவால் இதுவரை 6 லட்சத்து 36 ஆயிரத்து 475 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)

## ஏகே 47 கையிலெடுத்த ஆப்கான் இளம் பெண்

வைரலாகும் புகைப்படம்



காபூல், ஜூலை 24

ஆப்கானிஸ்தானில் பெற்றோரைக் கொன்ற இரண்டு தாலிபான் தீவிர வாதிகளை சுட்டுத்தள்ளிய பதின்ம வயது பெண் ஒருவர் சமூக ஊடகங்களில் பிரபல்யமாகி வருகிறார்.

தமது பெற்றோர் கொல்லப்பட்ட பிறகு, தமது குடும்பத்தின் ஏகே 47 துப்பாக்கியைக் கையில் ஏந்திய இந்தப் பெண், இரண்டு தீவிரவாதிகளை சுட்டுக் கொன்றார். இவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேலும் பலர் காயமடைந்ததாக கோர் மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ரி1)



## செவ்வாய் சென்றது சீனாவின் டியன்வன்–1

பீஜிங், ஜூலை 24

செவ்வாய் கிரகத்திற்கான முதலாவது விண்கலத்தை சீனா நேற்று விண்ணில் ஏவியுள்ளது.

ஆறு சக்கரங்கள் கொண்ட இந்த ஆய்வு இயந்திரம் ஹய்னான் தீவில் உள்ள வென்சாங் ஏவுதளத்தில் இருந்து லொங் மார்ச் 5 ரொக்கெட் மூலம் ஏவப்பட்டது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் இந்த விண்கலம் செவ்வாயின் சுற்றுவட்டப்பாதையை அடையவுள்ளது. இதனைத் தொடர்ந்து அடுத்து மூன்று, நான்கு மாதங்களில் டியன்வன்-1 ஆய்வு இயந்திரம் செவ்வாயில் தரையிறங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ரி1)

## சூர்யாவின் மிரட்டலான 'வாடிவாசல்'

நடிகர் சூர்யாவின் பிறந்தநாளுக்கு வாழ்த்து தெரிவிக்கும் விதமாக 'வாடிவாசல்' படக்குழு சிறப்பு போஸ்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது.

வெற்றிமாறன் இயக்கத்தில் சூர்யா நடிக்க உள்ள படம் வாடிவாசல். மெரினா போராட்டம் மூலம் உலக அளவில் பிரபலமான ஜல்லிக்கட்டு படத்தில் சூர்யா நடிப்பதால் படத்துக்கு பெரிய எதிர்பார்ப்பு உள்ளது. இந்தப் படத்துக்கு, ஜிவி பிரகாஷ் இசையமைக்கிறார். ஊரடங்கு முடிந்ததும் இதன் படப்பிடிப்பு தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சூர்யாவின் பிறந்தநாளான நேற்று, தயாரிப்பாளர் தாணு வாடிவாசல் படத்தின் போஸ்டரை வெளியிட்டு வாழ்த்து தெரிவித்துள்ளார்.




## சிம்பு - த்ரிஷா திருமணம்?

பரபரப்புக்கு முற்றுப்புள்ளி



தமிழ் சினிமாவில் வெளிவந்த காதல் படங்களில் கவுதம் மேனன் இயக்கத்தில் வெளிவந்த 'விண்ணைத் தாண்டி வருவாயா' படம் ஒரு முக்கியமான படமாக அமைந்தது. அப்படத்தில் சிம்பு, த்ரிஷா ஜோடி பொருத்தமான காதல் ஜோடியாக இருந்ததாக பலரும் பாராட்டுத் தெரிவித்தார்கள்.

அப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், இந்த கொரானோ ஊரடங்கில் கார்த்திக் டயல் செய்த எண்-39; என கார்த்திக், ஜெஸ்ஸி ஆகிய இரு கதாபாத்திரங்களிலும் சிம்பு, த்ரிஷாவை அவரவர் வீட்டிலிருந்தே நடிக்க வைத்து பரபரப்பூட்டினார் கவுதம் மேனன்.

கடந்த சில நாள்களாக சில பாலிவுட், டோலிவுட் இணையதளங்களில் சிம்பு, த்ரிஷா இருவருக்கும் இடையே திரும் என புதிதாக செய்திகள் வெளியாகி "பரபரப்பை ஏற்படுத்தி வருகின்றன. இருவருக்கும் திருமணம் என ஒரு செய்தி பரவ என்ன காரணம் என ரசிகர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தநிலையில் "உலகமே கொரோனாவால் பாதிக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ள நிலையில், ஏழை, எளிய மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்போது இதுபோன்று வதந்தி பரப்பி சிலர் மகிழ்கின்றனர். இதில் உண்மையில்லை" என சிம்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தங்கமாக மாறியது வெள்ளிப் பதக்கம்!

புதுடெல்லி, ஜூலை 24

2018 ஆம் ஆண்டு ஆசிய போட்டியில் 4x400 மீற்றர் கலப்பு ஓட்ட பந்தயத்தில் இந்திய அணி வென்ற வெள்ளிப் பதக்கம் தற்போது தங்கமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

ஜகர்த்தாவில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிய விளையாட்டு போட்டியில் 4x400 மீற்றர் கலப்பு ஓட்டப் பந்தயத்தில் இந்தியாவைச் சேர்ந்த முகமது அனாஸ், எம்.ஆர். பூவம்மா, ஹிமாதாஸ், ஆரோக்கிய ராஜிவ் ஆகியோர் வெள்ளிப் பதக்கம் வென்றனர். பஹ்ரைன் அணி தங்கப்பதக்கம் வென்றது.

தடைதாண்டும் ஓட்டப்பந்தயத்தில் அனு ராகவன் 56.92 வினாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து 4 ஆவது இடம்பிடித்தார்.

பஹ்ரைன் அணியில் கலந்து கொண்ட வீரர்களில் ஒருவரான கெமி அடெகோயா ஊக்கமருந்து உட்கொண்டார் எனத் தெரியவந்துள்ள நிலையில் அந்த வீராங்கனைக்கு நான்கு ஆண்டுகள் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதனால் 4x400 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இந்திய அணி வென்ற வெள்ளிப் பதக்கம் தங்கப் பதக்கமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. பெண்களுக்கான தடை தாண்டி ஓடும் போட்டியில் 4 ஆவது இடம் பிடித்த அனு ராகவன் வெண்கலப் பதக்கம் பெறுகிறார். இதில் கெமி தங்கப் பதக்கம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(ரி2)

# மொயீன் அலிக்கு உப தலைவர் பதவி

லண்டன்,ஜூலை 24




இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் எதிர்வரும் 30 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடருக்கான இங்கிலாந்து அணியின் உப தலைவராக மொயீன் அலி நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தொடருக்கான குழாத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிவரும் எந்த ஓர் இங்கிலாந்து வீரரும் இணைக்கப்படவில்லை.

கொவிட்19 வைரஸ் தொற்று பாதுகாப்பு விதிமுறைகள் காரணமாக இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான குழாம் மற்றும் அயர்லாந்து அணிக்கு எதிரான தொடருக்கான குழாம் என இரு வெவ்வேறு குழாம்களை அறிவித்திருந்தது.

இவ்வாறான நிலையில், இங்கிலாந்து அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான உப தலைவராகச் செயற்பட்டு வந்த ஜோஸ் பட்லர், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வருவதால், அயர்லாந்து அணிக்கு எதிரான ஒரு நாள் தொடரில் விளையாடும் வாய்ப்பை இழந்துள்ளார். இங்கிலாந்து அணியின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட அணியின் தலைவரான இயன் மோர்கனுக்கு உதவியாக, உப தலைவராக மொயீன் அலி நியமிக்கப்பட்டுள்ளார்.

மொயீன் அலி இங்கிலாந்து அணியின் வெற்றிப் பயணமான உலகக் கிண்ணத்தில், தன்னுடைய 100 ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடியிருந்த போதும், மோசமான பிரகாசிப்பின் காரணமாக அணியிலிருந்து வெளியேறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ரி2)



# மூத்த ஹொக்கி வீரர் காலமானார்

புதுடெல்லி, ஜூலை 24

மூத்த ஹொக்கி வீரர் ராமன் சென்னையில் காலமானார். தமிழ்நாடு அணிக்காக 1963 முதல் 1968 ஆம் ஆண்டு வரை விளையாடிய ராமன், பாரத ஸ்டேட் வங்கி அணிக்காக 1974 ஆம் ஆண்டு வரை விளையாடியுள்ளார். சென்னை ஹொக்கி லீக் தொடரில் பல ஆண்டுகளுக்கு மேலாக களம் கண்டுள்ளார். தென்மண்டல ஹொக்கி அணியிலும் இடம் பெற்றிருந்தார். இந்திய அணிக்கான தேர்வு முகாமில் 1968, 1969 ஆண்டுகளில் பங்கேற்றுள்ளார்.

பாரத ஸ்டேட் வங்கி அதிகாரியாக பணியாற்றி வந்த ராமன், ஓய்வுக்குப் பிறகு சென்னை திருவான்மியூரில் குடும்பத்தினருடன் வசித்து வந்தார் வயது மூப்பு காரணமாக நேற்று முன்தினம் காலமானார். ராமன் மறைவுக்கு சென்னை ஹொக்கி சங்கத்தலைவர் ஒலிம்பியன் பாஸ்கரன், பொதுச் செயலாளர் உதயகுமார் மற்றும் ஹாக்கி வீரர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ரி2)



# நோய்களுக்கு தீர்வு தரும் இயற்கை மருத்துவம்

**வயிற்றுக் கடுப்பு:** வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டால் புழுங்கல் அரிசி வடித்த தண்ணீரில் சிறிதளவு உப்பையும், வெண்ணெய்யையும் கலந்து குடியுங்கள். சிறிது நேரத்திலேயே குணம் தெரியும்.

**பற் கூச்சம்:** புதினா விதையை வாயில் போட்டு மென்றுக்கொண்டிருந்தால் பல்லில் ஏற்படும் கூச்சம் மறையும். அல்லது புதினா இலையை நிழலில் காயவைத்து தூள் உப்பு சேர்த்து பல் துலக்கினால் ஓரிரு நாளில் குணமாகும்.

**வாய்ப் புண்:** வாய்ப் புண்ணுக்கு கொப்பரைத் தேங்காயை கசகசாவுடன் சேர்த்துச் சாப்பிட்டால் குணமாகும். அல்லது கடுக்காயை வாயில் ஒதுக்கி வைத்தால் வாய்ப்புண் ஆறும்.

**தலைவலி:** பச்சை கொத்துமல்லித் தழைகளை மிக்ஸியில் அரைத்து தினமும் காலையில் எழுந்தவுடன் குடித்துவர தலைவலி நீங்கும்.

**இடுப்புவலி:** சாதம் வடித்த கஞ்சியை எடுத்து ஆறவைத்து ஒரு கரண்டி நெய்யில் கொஞ்சம் சீரகம் கலந்து குடித்தால் இடுப்புவலி நீங்கும்.

**ஆறாத புண்:** விரலி மஞ்சளை சுட்டுப் பொடிசெய்து தேங்காய் எண்ணெய்யில் குழப்பி காலையிலும் இரவிலும் ஆறாத புண்களுக்கு மேல் போட்டால் சீக்கிரம் குணமாகிவிடும்.

## சோம்பலாக இருப்பவர்கள் சுறுசுறுப்பாக மாற

# வெந்தயக் கீரை சூப்

தேவையான பொருள்கள்:
வெந்தயக்கீரை – சிறிதளவு
காய்ச்சிய பால் – 1/2 கப்
பெரிய வெங்காயம் – 2
தக்காளி – 2
சோள மாவு – 1 தேக்கரண்டி
பூண்டு – 3 பல்
வெண்ணெய் – சிறிதளவு
மிளகுப்பொடி தேவைக்கேற்ப
உப்பு – தேவையான அளவு



## செய்முறை:

வெந்தயக்கீரையைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவேண்டும். பின் வெங்காயம், தக்காளி என்பவற்றை கழுவி பொடியாக நறுக்கி தனித்தனியாக வைத்துக்கொள்ள வேண்டும். அதன்பின் சட்டியில் சிறிதளவு வெண்ணெயை ஊற்றி வெங்காயம், தக்காளி ஆகியவற்றை நன்றாக வதக்கி கொள்ள வேண்டும். பின்பு தேவையான அளவு தண்ணீர் விட்டு கொதிக்க வைக்க வேண்டும். தண்ணீர் நன்கு கொதிக்கும் போது நறுக்கிய வெந்தயக்கீரை, பூண்டு ஆகியவற்றைச் சேர்த்து வேக வைக்கவேண்டும்.

வெந்ததும் காய்ச்சிய பாலில் சோள மாவைக் கரைத்து வேக வைத்த கலவையுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். இது நன்கு அதனுடன் கலந்ததும் அடுப்பை அணைத்து இறக்கி விடவேண்டும். பின்பு உப்பு, மிளகுப்பொடி தேவையான அளவு சேர்த்துக் கொள்ள வேண்டும். சத்தான வெந்தயக் கீரை சூப் தயாராகி விடும்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 24.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.